[1992 மார்ச் 25

ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா, அதைக் களைய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தவறு வராமல் தடுப்பதற்கு பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 340.—திரு. வ. சத்தியமூர்த்தி—மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

340—

சீர்மரபினருக்கு மானியத்துடன் வீட்டுவசதி.

*4732 திரு. வ. சத்தியமூர்த்தி:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்பட்டோர் நல அலுவலகத்தின் மூலம் சீர்மரபினர்களுக்கு மானியத்துடன் வீடு கட்டிக்கொடுக்க பல்வேறு கிராமங்களிலுள்ள பயனாளிகளிடம் கிராம நிர்வாக அலுவலர் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டனவா?

(ஆ) அப்படியாயின் எந்த ஆண்டு பெறப்பட்டது?

(இ) விண்ணப்பதாரர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ), மற்றும் (இ): இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி நேரத்தில் புகாராகச் சொல்லவில்லை. தகவலாக நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் புகார் கூடாது. தகவல் தெரிவியுங்கள்,

1992 மார்ச் 25]

திரு. வ. சத்தியமூர்த்தி : புகார் அல்ல. தகவலாக நான் சொல்வதை எடுத்துக் கொள்ளுங்கள். இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டத்தில் சீர்மரபினர் வாழ்கின்ற கிராமப்புறங்களில், ஏழை எளியவர்களிடம் 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு கிராம நிர்வாக அதிகாரிகள், உங்களுக்கு மானியத்துடன் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட இருக்கின்றன, உங்களுடைய பட்டாக்களைக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கி, அவர்களிடம் செலவுத் தொகை என்ற பேரில் ஒன்றையும் வாங்கி, அதற்கு மதிப்பீடு தயார் செய்து, பிற்பட்டோர் நல அதிகாரி மூலம், பிற்பட்டோர் நல இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து, உங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை இருக்கிறது என்ற தகவலை அனுப்பிக் கொண்டு, தொடர்ந்து அவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏமாற்றப் படாமல் அவர்களுக்கு இந்த நிதி ஆண்டில், சீர் மரபினர்களுக்கு மானியத்துடன் வீடுகள் கட்டிக் கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நடவடிக்கை எடுக்க முடியுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் இங்கே ஒரு விளக்கத்தைக் கேட்டு இருக்கிறார்கள், இந்த ஆண்டிலாவது சீர்மரபினருக்கு வீடுகள் கட்டித்தர இயலுமா என்று. இந்த ஆண்டு அரசு, குறிப்பாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதை எப்படியாவது நிறைவேற்றுவதற்காக எப்படி திட்டங்களைத் தீட்டுவது, எப்படி நிதி ஒதுக்கீடு செய்வது, மத்திய அரசினிடத்திலேயிருந்து இப்போது, புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற பிற்படுத்தப்பட்டோர் பொருளாதாரக் கழகத்தில் இருந்து நிதியுதவி பெற முடியுமா என்பதைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கும்படி துறையைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்குப் பிறகு தான் இதைப்பற்றிய ஒரு முடிவெடுக்க முடியும். ஆனால், சீர்மரபினருக்காக வீடுகள் கட்டுகிற திட்டம் 1981ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறைவேற்றப்படவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் தெரிவிப்பதைப்போன்று யாராவது அந்தப் பகுதியில் இருக்கின்ற அதிகாரிகள் இப்படி தவறாக, பொது மக்களைத் திட்டமிட்டு ஏமாற்றுகிற முயற்சியில் ஈடுபட்டதை அவர்கள் ஆதாரத்தோடு தெரிவித்தால், உடனடியாக அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தர்மலிங்கம். இது இராமநாதபுரம் மாவட்டம் பற்றியது.

திரு. கி. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு புரட்சித் தலைவி ஆட்சியில் வரும் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட சமூகத்திற்காக 5,000 வீட்டுமனைகள் கொடுப்பதாக இந்த அரசு அறிவித்ததைக்கண்டு மகிழ்ச்சி எய்தி அந்த 5,000 வீட்டுமனைப்பட்டாக்களைக் கொடுக்கும்போது அதைத் தொகுப்பு வீடுகளாக அரசு அவர்களுக்குக் கொடுத்து உதவுமா என அறிய விரும்புவதோடு, அந்தத் தொகுப்பு வீடுகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பெயரைச் சூட்டி அந்த மாபெரும் திட்டத்தின் பயன் கூட்டப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக துறை அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, சீர்மரபினருக்கு, சலவையாளர் போன்ற வாழ்க்கையில் மிகவும் பின்தங்கியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக நிலங்கள் ஒதுக்கித் தருவதற்காக நிலங்களைக் கையகப்படுத்துகிற திட்டம்தான் இப்போது அரசு அறிவித்திருக்கிற திட்டம். நடைமுறைப்படுத்துகிற திட்டம். ஆகவே, வீடு கட்டுகிற திட்டம் இதில் அடங்காது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்புகிற கேள்விக்கு விடையளிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 341—திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு கல்வியமைச்சர்.

341—

மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம்

*1318 திரு. பே. தர்மலிங்கம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்பப் பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்த அளவில் மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் ஆசிரியர்களை நியமனம் செய்யப்படுகிறது.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியின் பயனை அனைவரும் அடையவேண்டும் கல்லாதார் இல்லை என்ற நிலை வரவேண்டும் என்கிற வேட்கை